
சிவசிவ

"தொண்டர் நாள்தொறுந் துதிசெய வருள் செய்
கேதீச்சர மதுதானே"



# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

## ஆண்டுப் பொதுக் கூட்டம் (18-12-2005)

## ஆண்டறிக்கையும் கணக்கறிக்கையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
# ஆண்டுப் பொதுக்கூட்டம்

| | | |
|---|---|---|
| நாள் | - | பார்த்திப ஆண்டு, மார்கழித் திங்கள், 3ம் நாள் (18-12-2005) ஞாயிற்றுக்கிழமை. |
| காலம் | - | காலை 10 மணி |
| இடம் | - | சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி. |

## நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. சென்ற ஆண்டுக் கூட்ட அறிக்கை.
3. ஆண்டறிக்கை (2003-2005)
4. கணக்கறிக்கை (2002-2003, 2003-2004, 2004-2005)
5. தலைவர், மற்றும் பதவிகளுக்குரிய தெரிவு
6. உள்ளகக் கணக்காய்வாளர் தெரிவு
7. பொதுக் கணக்காய்வாளர் தெரிவு
8. முன்மொழிவுகள்
9. தேவாரம்.

நன்றி

இ. நமசிவாயம்
தலைவர்

ச. சரவணமுத்து
செயலாளர்

சரஸ்வதி மண்டபம்
75 லொறன்சு வீதி,
கொழும்பு - 04
தொலைபேசி - 2585975
கோவில் - 023-2233003 , 060-2230034



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

09-02-2003 ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு.இ. நமசிவாயம் |
| பதில்தலைவர் | - | திரு. மா. தவயோகராசா |
| செயலாளர் | - | திரு.ச.சரவணமுத்து |
| துணைச் செயலாளர்கள் | - | புலவர் அ. திருநாவுக்கரசு |
| | - | திரு. செ. இராகவன் |
| | - | திரு. சு.பிருந்தாவன நாதன் |
| கூட்டுப் பொருளாளர்கள் | | திரு. ச. திருவாதவூரன் |
| | - | திருமதி அ. கயிலாசபிள்ளை |
| | - | திரு. எஸ்.யூ. சந்திரகுமாரன் |
| துணைப் பொருளாளர்கள் | - | திரு செ.தி.கனகலிங்கம் |
| | - | திரு. எஸ். கனகசிங்கம் |
| உள்ளகக் கணக்காய்வாளர்கள் | - | திரு.கா.ஞானகாந்தன் |
| | | திரு. பி. பரமேஸ்வரன் |
| பொதுக் கணக்காய்வாளர் | - | கே.கே ஞானேந்திரன் அசோசியேற்ஸ் |

**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை** —

1. திரு. வி. கயிலாசபிள்ளை
2. கலாநிதி. பொன். விக்னராசா
3. திரு. சி. தியாகராசா
4. திரு. க. சண்முகலிங்கம்
5. திரு. சி.சிவலிங்கம்
6. திரு. வி.எஸ். துரைராசா
7. பழைய கதிரேசன் கோவில் சார்பாக திரு. அரு. இரா. அருணாசலம் செட்டியார்.
8. புதிய கதிரேசன் கோவில் சார்பாக திரு.எஸ். சுப்பிரமணியம் செட்டியார்.
9. திருப்பணிச்சபைத் தலைவர், பதவி வழியால் - திரு. இ.நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. திருப்பணிச் சபைச் செயலாளர், பதவி வழியால் - திரு.ச.சரவணமுத்து
11. திருப்பணிச்சபைப் பொருளாளர், பதவி வழியால்- திரு.ச.திருவாதவூரன்

**துணைத் தலைவர்கள்**

1. திரு. வே.வல்லிபுரம்
2. திரு. க.கணேஷ் (அரசஅதிபர், வவுனியா)
3. திரு.வி.ஆர். வடிவேற்கரசன்
4. திருமதி சிவானந்தினி யோகேந்திரா
5. திரு. இந்திராணி யோகராசா
6. திரு.சி.திருநாவுக்கரசு
7. திரு.வே.விசுவலிங்கம் (அரசஅதிபர், மன்னார்)
8. திரு.கந்தையா நீலகண்டன்
9. திரு. தி.இராசநாயகம் (அரசஅதிபர், கிளிநொச்சி)
10. திரு.வை.செ.தேவராசா
11. திரு.க.அருணாசலம்
12. கலாநிதி. ஆ.சி. குணசிங்கம்
13. திரு. எஸ்.ஆர்.கே.கனகீசுவரன்
14. திரு. ச.த.சி. அருளானந்தம்
15. திரு. த.சண்முகலிங்கம்
16. திரு. எஸ் எஸ். இராமகிருஷ்ணன்
17. திரு. திருஞானசம்பந்தர்.
18. திரு. இ. நடராசா
19. திரு. வே.கந்தசாமி
20. திரு. நா. பேரின்பநாயகம்
21. திரு. சி. தனபாலா
22. செல்வி.மாலா சபாரத்தினம்
23. கலாநிதி வி. அம்பலவாணர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. திரு.த. குழந்தைவேலு
25. திரு. க.ஜெகதீசன்
26. திரு. என் மன்மதராசா
27. திரு. எஸ்.பி.சாமி

## ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

1. செல்வி.சிவமலர். சுப்பிரமணியம்
2. திரு. சி.கந்தசாமி
3. திரு. எஸ். மகாகணபதிப்பிள்ளை
4. திரு. சிவகுமார் நமசிவாயம்
5. திரு. தி. அறிவழகன்
6. திரு. க.முத்துக்குமாரசாமி
7. திரு. வே. முத்தையா
8. திரு. எஸ். ஞானசுந்தரம்
9. திரு. நா.வாகீசமூர்த்தி
10. திரு. ச. இலகுப்பிள்ளை
11. டொக்டர். சிவகுமார் செல்லையா
12. திரு. வீ.ஏ.திருஞானசுந்தரம்
13. திரு. ஆ.கந்தசாமி
14. திரு. இ.நிமலன் கார்த்திகேயன்
15. திரு. கு.வாகீஸ்வரன்
16. திரு. த.தர்மபாலன்
17. திரு. க.குமரன்
18. திரு. த.சிவஞானரஞ்சன்
19. திரு. கே.எஸ்.இரத்தினவேல்
20. திரு. ஏ.ஜ.தயானந்தராசா
21. திரு. வி.செல்வகுமரன்
22. திரு. பொ.இராசேந்திரபதி
23. திரு. க.வ.கமலேஸ்வரன்
24. திரு. சி.கந்தசுவாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை
# 34ம் ஆண்டறிக்கை

நிகழும் பார்த்திப ஆண்டு, மார்கழி 3ம் நாள் (18-12-2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பம்பலப்பிட்டி, சரசுவதி மண்டபத்தில் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் 16-01-2003 தொடக்கம் 31-03-2005 வரையான கணக்கறிக்கை ஆகியன சமர்பிக்கப்படுகின்றன.

### கூட்டங்கள்

மேற்குறிப்பிட்ட காலத்தில் 18 செயற்குழுக் கூட்டங்களும் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக் கூட்டங்களும் ஒன்றாக நடைபெற்றன. இக்காலத்தில் 78 புதிய ஆயுட் கால உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.

### திருப்பணிவேலைகள்

பெருஞ்சாந்தி விழா நடைபெற்றது. யுத்தம் காரணமாகப் 13 ஆண்டுகள் பூசைகளோ விழாக்களோ இன்றி இருந்த இத்தலத்திற்கேற்பட்ட சிதைவுகளைத் திருத்தியும் புதிதாக வர்ணம் பூசியும் மறுசீரமைத்தும் 39 குண்டங்களாலான பெருஞ்சாந்தி விழா (மகாகும்பாபிடேகம்) நடத்தப் பெற்றது. இவ்விழாவிற்கெனத் திரவியங்கள் கொள்வனவு செய்ததுடன் சிவாச்சாரியார்கள் தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப்பட்டனர். சிவஸ்ரீ சுவாமிநாத சிவாச்சாரியார் அவர்களைச் சர்வ சாதகராகக் கொண்டு ஐவர் வருகை தந்தனர். திருக்கேதீச்சரத் திருக்கோயில் பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிரமணியக் குருக்கள் முதன்மைக்குருவாக விளங்கினார். ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் உதவிச் சிவாச்சாரியார்கள் அழைக்கப்பட்டனர். 06-07-2003இல் பெருஞ்சாந்திவிழா இனிதே நிறைவெய்தியது. தொடர்ந்து, 48 நாட்கள் மண்டலாபிடேகம் சிறப்பாக நடைபெற்று, நிறைவு நாளன்று 1008 சங்காபிடேகமும் பஞ்சமூர்த்திகள் வெளிவீதியுலாவும் இனிதே நடைபெற்றன. பெருஞ்சாந்தி விழா மலரும், பல அறிஞர்களின் கட்டுரைகளுடன் வெளியிடப்பட்டது.

இவ்விழாவில் மன்னார் அரச அதிபர் திரு.வே.விசுவலிங்கம் அவர்களும் செயலகப் பணியாளர்களும், வவுனியா அரச அதிபர் திரு.க. கணேஷ் அவர்களும் பணியாளர்களும், கிளிநொச்சி அரச அதிபர் திரு. தி. இராசநாயகம் அவர்களும் பணியாளர்களும் ஒப்பந்த வேலை செய்துவரும் திரு.க. குலேந்திரராசா அவர்களும் பணியாளர்களும் இச் சேவைகளில் முழுமையாக ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்தப் பூசை, விழாக்களுக்குத் தேவையான விளக்குகள், குடங்கள், செம்புகள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை அறங்காவற் குழுத்தலைவர் திரு.வி. கயிலாசப்பிள்ளை, இணைப்பொருளாளர்கள் திருமதி. அ.கயிலாசபிள்ளை, திரு. ச.திருவாதவூரன், புலவர்.அ. திருநாவுக்கரசு ஆகியோரின் முயற்சியால் கொள்வனவு செய்யப்பட்டது. இப்பொருட்களில் பெரும்பாலானவை புலவர். அ. திருநாவுக்கரசு அவர்களின் முயற்சி காரணமாக ஓசியானிக் இம்பெக்ஸ் நிறுவனத்தார் எவ்விதக் கொடுப்பனவுமின்றி இந்தியாவிலிருந்து வரவழைத்துத்தந்தமை குறிப்பிடத்தக்கது.

பெருஞ் சாந்தி விழா நிறைவடைந்ததும் ஆறு காலப்பூசையும் விழாக்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. இப்பூசைகள், விழாக்களை முன்பு காணிக்கையாளர்களாகச் செய்து வந்தவர்களைத் தேடித் தொடர்பு கொண்டு அவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

பெருஞ் சாந்திவிழா நடைபெற்றதைத் தொடர்ந்து கொடியேற்றப் பெருவிழா நடத்தப்பட்டது.

1. திருக்கொடித் தம்பம்
2. திருத்தேர்கள் ஐந்து
3. வாகனங்கள்
4. தேரடி வயிரவ கோயில்

ஆகியன பெரும் முக்கியத்துவம் வாய்ந்தன.

இவற்றுள் திருக்கொடித்தம்பம், அதன் செப்புக் கலசங்கள் வாகனங்கள், வாகனக்கொம்புகள் இவையனைத்தும் திருக்கோயில் ஸ்தபதி திரு.செ. பாலசுந்தரம் தலைமையில் செய்யப்பட்டன. விநாயகர் திருத்தேரினை திருப்பணிச்சபையும்சுவாமி தேரினை வவுனியா வாழ் சைவ வார்த்தகர்களும், அம்பாள் திருத்தேரினை சுவிஸ்நாட்டில் வாழும் சைவ அன்பர்களும், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர் திருத்தேர்களை திரு.வி.கயிலாசபிள்ளை குடும்பத்தினரும் அவற்றிற்குரிய செலவுகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். இவ்வாறு பணிகள் யாவும் மிகச் சிறப்பாக நிறைவேறின. தேர்ச் சேலைகள், கொடிகள், தொம்பை, வாசமாலை, கலசங்கள் யாவும் கும்பகோணத்திலிருந்து வருவிக்கப்பட்டன. திருக்கோயில் ஸ்தபதி செ.பாலசுந்தரம், திரு. ஆ.துரைராசா , திரு.இ.சிறீநாதன் ஆகியோரை முதன்மையாகக் கொண்டு இந்தத் திருத்தேர்கள் ஐந்தும் நிறைவு செய்யப்பட்டன.

விழாவில் வீதியுலா வருவதற்குரிய வாகனங்கள் சீர்செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டது. இவ்விழாவிற்கு அவசிய தேவையெனக் கருதி தேரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிரவர் கோயில் சபையால் அமைக்கப்பட்டது. முத்து மணவறை ஒன்று ரூபா 71,000/- ம் செலுத்தி கொள்முதல் செய்யப்பட்டது.

### பாலாவி

பாலாவி தூய தீர்த்த மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டது. இதில் சிவன் திருமேனி, இடபங்கள், பூதங்கள், அழகுற வடித்து அமைக்கப்பட்டுள்ளது. பாலாவி விநாயகர் ஆலயத்தில் விநாயகர் திருமேனி, பூதங்கள், எலிவாகனங்களுடன் திருத்தியமைக்கப்பட்டது.

பாலாவியின் முன்னூறு அடி நீளமான படிகள் ஐந்தும் சிதைவுகளை நீக்கி அமைத்ததுடன் மகளிர் உடைமாற்றும் அறையும் சுவாமியைக் காவி ஏறிச் செல்லும் படிகள் இருபத்தொன்றும் திருத்தியமைக்கப்பட்டன

திருமதி அமிர்தவல்லி விஸ்வா செல்வரத்தினம் (சேர். கந்தையா வைத்தியநாதனின் மகள்) திரு. கணநாதலிங்கம் ஆகியோரின் முயற்சியால் பாலாவியின் உள் அரைப்பங்கு புல், பாசி, சேறு , தூர்வாரி அகற்றப்பட்டது. இவ்வாண்டு பெய்த பெரு மழையினால் மேற்குப்புற அணைக்கட்டு உடைப்பெடுத்து நீர் வெளியேறிய வேளை பல அன்பர்கள் சேர்ந்து மண்மூடைகளிட்டு நீர் வெளியேறுவதைத் தடைசெய்து பாதுகாத்தனர். பதினைந்து ஆண்டுகளாக இராணுவத்தினர் வையாவெளிக் குளத்திற்குச் செல்லும் கழிவு நீரைச் செல்ல ஒட்டாது தடுத்திருந்தனர். சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் உரையாடியதன் பயனாக நீர்ப்போக்கி திறந்து விடப்பட்டது. இதனால் உடைப்பெடுத்த அணைக்கட்டினைக் கட்டுப்படுத்த முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

### மீள்குடியேற்றம்

திருப்பணிச் சபையின் துணைத் தலைவர் கலாநிதி ஆ.சி. குணசிங்கம் அவர்களின் பெருமுயற்சியாலும், மன்னர் அரசாங்க அதிபர் திரு. வே. விஸ்வலிங்கம் அவர்களின் விடாமுயற்சியாலும் யுத்தத்தினால் இடம் பெயர்ந்த மக்களிற் சிலர் திருக்கேதீச்சர வட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். முதலில் 40 மனைகள் அமைக்க இசைவு வழங்கப்பட்டது. இவர்களில் 24 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். இதற்கு வேண்டிய சாலைகள், குடிநீர், மின்னொளி அமைக்கப்பட்டன. அத்துடன் கௌரி அம்பாள் பாடசாலையும் மீள அமைக்கப்பட்டது. அப்பாடசாலைக்கு வேண்டிய புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கு நிதி வழங்கியும், சிறுவர் பாடசாலை, கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் அமைக்க ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றிற்காக அரச அதிபர் திரு. வே.விஸ்வலிங்கம், கலாநிதி அ.சி. குணசிங்கம் ஆகியோருக்கு திருப்பணிச்சபை நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளது.

## நீர் வழங்கல் திட்டம்

ஆலயத்திற்கும் குடியேற்றவாசிகளுக்கும் மிக அவசியத் தேவையாகவிருந்த நீரை வழங்குவதற்கு கலாநிதி.ஆ.சி. குணசிங்கம் அவர்கள் மேற்கொண்ட பெரு முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டியது. அவருடைய பெரு முயற்சியால் பாரிய நீர்தாங்கி ஒன்று திருக்கேதீச்சரத்தில் அமைக்கப்பட்டது. 12 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள முருங்கனிலிருந்து திருக்கேதீச்சரம் வரை நீர் வழங்கும் குழாய்கள் பொருத்தி, 2004ம் ஆண்டு மகாசிவராத்திரியன்று வருகை தந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் குடியிருப்பாளருக்கும் நீர் வழங்கிய அன்னாரின் சேவையை திருப்பணிச்சபை பெரிதும் மெச்சுகிறது.

## அலங்கார வளைவு

நிறைவுறாதிருந்த திருக்கேதீச்சரச் சந்தி தோரண நுழை வாயிலை, இந்தியச்சிற்பிகளை அழைத்து மான், மந்தி, கொடிப்பெண், பாவை, விளக்கு, சோமாஸ்கந்த மூர்த்தி, நால்வர், வாழை தென்னை போன்ற தேவாரப்பாடலிலுள்ளவாறு சிற்பங்கள் அமைத்து மிக அழகுற வண்ணம் தீட்டி 2005 மகா சிவராத்திரியன்று, திருப்பணிச் சபை தலைவர் திரு. இ. நமசிவாயம் தலைமையில் அறங்காவற் குழுத்தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளையினால், மங்கள இசை முழங்க, வெகு சிறப்பாகத் திறந்து வைக்கப்பட்டது. நுழை வாயிலை அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் தமது அமைச்சால் ரூபா 3 இலட்சம் வழங்கினார். இதன் முழுச் செலவு ரூபா ஒன்பது இலட்சம் ஆகும். மிகுதி ரூபா ஆறு இலட்சம் திருப்பணிச் சபை பொறுப்பேற்று நிறைவு செய்தது.

## வீதி அபிவிருத்தி

கலாநிதி ஆ.சி. குணசிங்கம் அவர்களின் நெகொட் சிறப்பு நிதி ஒதுக்கீட்டினால் அம்பாள்வீதி, சிவன் வீதி ஆகியன சிறந்த முறையில் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

## மடங்கள்

திருக்கோயிலுக்கு வருகைதரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் வசதி கருதி, இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய திருஞான சம்பந்தர் மடத்தருகில் ரூபா ஒரு கோடி செலவில் 19 அறைகள் கொண்ட திருஞான சம்பந்தர் மடம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இக்கட்டிடத்தின் ஒப்பந்தகாரர் ஜெனரல் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட் திருப்பணிச் சபையின் சார்பில் நிறைவு செய்தது.

மகா சிவராத்திரி மட பரிபாலன சபையினர், இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்ட மகா சிவராத்திரி மடத்தினை மீளக் கட்டி அச்சபையின் தலைவர் திரு.வே.விஸ்வலிங்கம் தலைமையிலான அரச பணியாளர்களால் வெகு சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இச்சபையினர் மகா சிவராத்திரி விழாவிற்கும் ஏனைய விழாக்களுக்கும் வருகை தரும் அடியார்கட்கு திருவமுது, சிற்றுண்டி, தாகசாந்திச் சேவைகளை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

சுவாமி சரவணமுத்து அவர்களின் நினைவாக முன்பிருந்த திருவாசக மடத்தினை ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட அமைப்பாளர் திருமதி. லோகநாயகி அருளலிங்கம் அவர்களின் பெருமுயற்சியினாலும் அதன் தலைவர். திரு.க. இரத்தினசிங்கம் அவர்களின் உதவியினாலும் திருவாசக மடம் 8 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் அமைக்கப்பட்டு விழாக்களுக்கு வரும் அடியார்கட்குத் திருவமுது சிற்றுண்டி, தாகசாந்தி ஆகியன மிகச் சிறப்புடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இது அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் ஆதரவற்ற நிலைக்குள்ளாக்கப்பட்ட சிறார்களுக்கு தற்காலிக வதிவிடமாகத் துணைபுரிகின்றது.

## சிவனருள் இல்லம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட சிறார்கள் ஐம்பதின்மர் பலவசதிகளுடன் வதிவதற்காக "சிவனருள் இல்லம்" இலண்டன் டாக்டர் மஞ்சுளா ஜயேந்திரன் நமசிவாயம் அவர்களால், அன்னாரின் அன்னையார் நினைவாக, "விஜயலட்சுமி மாளிகை" எனும் பெயரில் பாரிய கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. இக்கட்டடம் எதிர்வரும் மகா சிவராத்திரிக்கு முன் நிறைவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த இல்லத்திற்கு இலண்டனிலுள்ள "தூக்கு" எனும் அமைப்பின் நிறுவனர் திரு. சொ. சுரேந்திரன் அவர்களின் பங்களிப்பும் கிட்டியுள்ளது.

ஏனைய மடங்களாகிய கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை மடம், திரு. சி.தியாகராசா (STR) மடம், பூநகரி மடம், சித்தி விநாயகர் சின்னத்தம்பி மடம், சிவபூமி அன்னதான மடம், ஆகியவற்றுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. சிவபூமி அன்னதான மடத்தினர் சிறிய களஞ்சியசாலை ஒன்றை அமைத்துள்ளனர்.

அவர்களின் கட்டிடம் நிறைவு பெறாத காரணத்தினால் சிவராத்திரி, பெருவிழாக் காலங்களில் இவர்கள் ஆலயத்திற்குரிமையான திருஞான சம்பந்தர் மடத்தில் திருவமுது, சிற்றுண்டி, தாகசாந்தி ஆகிய சேவைகளை, அச்சபையின் தலைவர் திரு. மா.தவயோகராசா அவர்களின் பணிப்பின் பேரில் திரு.நா. பேரின்பநாயகம், திரு.த. குழந்தைவேலு ஆகியோர் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

## திருவமுது

திருக்கோயிலுக்கு வருகின்ற அடியார்களின் வசதி கருதி, திருஞான சம்பந்தர் மடத்தில் திருவமுது, சிற்றுண்டிச் சேவைகள் திருப்பணிச் சபையின் சார்பில் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சேவைகளின் பொருட்டு, விரும்புகின்ற அடியவர்களிடமிருந்து அவர்களின் பிறந்த நாள், திருமண நாள், திதி ஆகியவற்றைக் குறித்த ஒரு நாளில் திருவமுது (அன்ன தானம்) நிகழ்த்த ஆவன செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஆண்டொன்றிற்கு ரூபா 2500 செலுத்தும் அன்பர்கள் 147 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## மின்பொறி

பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர் ஒருவரால் 2.5 வலுவுள்ள ஒரு மின் பொறி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி ரூபா 90,000 ஆகும். இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அமைச்சின் நிதியிலிருந்து ஆலயம், வசந்த மண்டபம், அலுவலகம் ஆகியவற்றிற்கு ஒளி வழங்கக்கூடிய 12.50/- வலுவுள்ள ரூபா 12½ இலட்சம் பெறுமதியான மின்பொறியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. மின்தடை ஏற்படும் காலங்களில் இது சேவை செய்து வருகின்றது.

## விபத்துக்குள்ளாகிய சபையின் மோட்டார் வாகனம்

திருப்பணிச் சபைக்குரிய மோட்டார் வாகனம் விபத்துக்குள்ளாகிப் பெருஞ் சேதமடைந்தமையால் அதற்குப் பதிலாக வேறொரு வாகனம் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் பொருட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சர் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அமைச்சின் நிதியிலிருந்து ரூபா பத்து இலட்சம் அன்பளிப்புச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவூல அறை

கருவூல அறையில் பெறுமதியான பொருட்களை வைப்பதற்காக ஒரு காப்புப் பெட்டகம் பொருத்தப்பட்டுள்ளது. நிமோகம்பனியாளரிடமிருந்து இக்காப்புப் பெட்டகத்தை , மிகச் சிரமத்தின் மத்தியில் கே.கே.ஆர். நிறுவனம் ஏற்றிக் கொணர்ந்து சேர்த்தது.

## இல்லங்கள்

சபையின் தலைவர் திரு இ. நமசிவாயம், அறங்காவல் சபைத் தலைவர் திரு. வி. கைலாசபிள்ளை ஆகியோர் வடக்கு வீதியில் இரு மனைகளைஅமைத்துள்ளனர்.

## கழிவறைகள்

திருக்கேதீச்சரம் கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக ஐந்து நவீன கழிவறைகளை அமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சு ரூபா நான்கு இலட்சம் வழங்கியுள்ளது. இக்கழிவறைப் பணிகள் நிறைவேறிவிட்டன.

## கருங்கல் திருப்பணி

கடந்த 30 ஆண்டுகளாக, தலைவர் திரு. இ. நமசிவாயம் அவர்களின் வேண்டுகோளின் பேரில், மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்ட சித்திரச் சிலைகளும் தூண்களும் இங்கு வந்து சேர்ந்துவிட்டன. புலவர் அ. திருநாவுக்கரசு சென்னையில் வசிக்கும் கப்டன் பிறைசூடி அவர்களுடன் தொடர்பு கொண்டு உரையாடியதன் பலனாகவும் அறங்காவற் குழுத்தலைவர் திரு. கயிலாசபிள்ளை அவர்களின் தொடர்ச்சியான முயற்சியால் மாமல்லபுரம் அரசினர் சிற்பக் கலைக்கல்லூரி அதிபரையும், கப்டன் பிறைசூடி அவர்களையும் கொண்டு திரு.கயிலாசபிள்ளை கப்டன் பிறைசூடி ஆகியோரின் கணிசமான நன்கொடையுடன் சென்னையிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு கொழும்புத்துறைமுகத்தை வந்து அடைந்தன. பின்னர் ஒப்பந்த அடிப்படையில், ஈஸ்ட் வெஸ்ற் கம்பனியின் பாரந்தூக்கிகள், பாரந்தாங்கிகள் மூலம், மொத்தம் 446 எண்ணிக்கையான கற்களையும் திருக்கேதீச்சரம் கொணர்ந்து சேர்த்தனர். இப்பணியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட திருவாளர்கள், இ.நமசிவாயம், கைலாசபிள்ளை, கப்டன் பிறைசூடி, புலவர், அ. திருநாவுக்கரசு, திரு. ஜெகதீசன் ஆகியோர் இப்பெரும் பணியில் ஈடுபாடு கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப்பணியில் இணைப் பொருளாளர் திரு.ச. திருவாதவூரன் அவர்கள் சுங்கத் திணைக்களம் (குடிவரவு குடியகல்வு ஆணையாளர்களைக் கொண்டு ஆற்றிய பெரும் பங்கு பெறுமதியானதெனின் அது மிகையாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய அரசு

இந்திய அரசு இலங்கையிலுள்ள ஓர் ஆலயத்தை மறுசீரமைப்புச் செய்வதற்கு விதந்துரை செய்யக்கோரியதற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருக்கேதீச்சர ஆலயத்தை விதந்துரைத்தார். அதற்கிணங்க இங்கு வருகை தந்த இந்திய அகழாய்வுப் பணிப்பாளர் திரு. C. பாபுராஜிவ், மேலாளர் திரு. சத்தியமூர்த்தி, திரு. தண்டாயுதபாணி ஆகியோர் திருக்கேதீச்சரத்திற்கு வருகைதந்து கட்டுமானப்பணிகள் பற்றி ஆய்வு செய்து சென்றுள்ளனர். இவர்கள் வந்து சென்றபின் இந்தியத்தூதுவர் நிருபமா ராவ் அவர்களும் திருக்கேதீச்சரம் வந்து நிலைமையைப் பார்வையிட்டுள்ளார்.

## தேரோடும் வீதி

ஐந்து திருத்தேர்களும் வீதியுலா வருவதற்காக 2100அடி நீளமும் 35அடி அகலமும் கொண்ட வீதி திண்மையாக அமைக்கப் பெற்றுள்ளது. செலவு செய்ய வேண்டிய தொகையிலிருந்து ஏழுமடங்கு குறைவாகவே செய்து முடிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். மதிப்பீட்டின்படி ரூபா 84 இலட்சம் செலவு செய்ய வேண்டியிருந்தது. எனினும் இது பத்து இலட்சம் ரூபா விற்குங்குறைவாகவே செய்து முடிக்கப்பட்டது. (சிதைந்த மடங்களை அகழ்ந்தெடுத்த கற்களைக் கொண்டே நிறைவு செய்யப்பட்டது 300 கியூப்கற்கள் பிற கட்டடங்கள் கட்டப்பயன்படுத்தச் சேகரிக்கப்பட்டுள்ளது).

## அஞ்சலகம்

உப அஞ்சலகம், திருப்பணிச்சபை செலவில், ரூபா நான்கு இலட்சத்திற்கு மேற்படாது செலவு செய்து கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

கச்சேரி பயன்படுத்தும் (RDS) அலுவலகமும் காவல் துறையினர் பயன்படுத்தும் அலுவலகமும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

## பசுமடம்

ஆலயத்திற்குப் புதிதாக ஒரு பசுமடம் கிழக்கு வீதியில் அமைப்பட்டுள்ளது. இதற்கு நல்லினக் கறவைப் பசுக்கள் நான்கு கொள்முதல் செய்வதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப் படுதல் வேண்டும்.

## பேருந்து நிலையம்

திருக்கேதீச்சரம் சந்தியிலிருந்து கோயிலுக்கும் பிற இடங்களுக்கும் பயணம் செய்யும் அடியார்கட்கும் பொது மக்களுக்குமாக பேருந்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிப்பிடம் ஒன்று கட்டி முடியும் தருவாயிலுள்ளது. இதற்குரிய செலவினை அரச அதிபர் பொது அமைப்பின் மூலம் பெற்றுத்தர ஆவனசெய்யக் கோரப்பட்டுள்ளது.

**மயானம்**

கடந்த பதினைந்து ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்த சைவர்களின் எரியூட்டும் சுடலை பெரும் முயற்சியால் மீளப்பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. மன்னார் மாவட்ட இராணுவத் தளபதியுடனும் உதவியார்களுடனும் தொடர்ந்து உரையாடியதன் பலனால் பெறப்பட்டது. அச்சுடலையிலிருந்த காடுகள் யாவும் வெட்டித் துப்பரவு செய்து பயன்படுத்தப்படுகின்றது. சுடலையைச் சுற்றி வேலி அல்லது மதில் கட்டி அதற்குள் ஒரு சிறிய மண்டபம் அமைப்பது அவசியமாகும். அத்துடன் தகுதியான இடத்தில் ஒரு மலர்ச்சாலை அமைப்பதும் முக்கியமாகும். இம்மலர்சாலை அமைத்தால் பூசைகள் தடைபடாதிருக்கும். அன்றியும் விரும்பும் அன்பர்கள் தம் உறவினர் உடல்களை வைத்து இறுதிச் சடங்கியற்றப் பெருந்துணையாக அமையும்.

**உழவு இயந்திரம்**

ஆலயத்தின் பெரும் பணிகளுக்காக, உழவு யந்திரம் ஒன்று, பெட்டி, நீர்தாங்கி உட்பட, கொள்வனவு செய்யப்பட்டு ஆலயத்தின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்ய உதவுகிறது. இதன் பெறுமதி ரூபா 15 இலட்சமாகும். உழவு வேலைக்காகக் கலப்பை ஒன்று ரூபா 32 ஆயிரம் செலுத்தி கொள்வனவுசெய்யப்பட்டுள்ளது.

**நந்தவனம்**

இதில் 600 பல்லின மலர்ச் செடிகளும் பஞ்சவில்வ மரங்களும் ஏனைய செடிகளும், 24 வெள்ளெருக்கும் 165 வாழை மரங்களும் 75 வெற்றிலைக் கொடிகளும் நாட்டிப் பாதுகாக்கப்படுகின்றன. இம்மரங்களைக் கொண்டே பூவினைஞர் கோயில் தேவைகளை நிறைவு செய்கின்றார். செங்கழுநீர், நீலோற்பல மலர்களை உற்பத்தி செய்வதற்காக தாமரை வடிவில் ஒரு தடாகங்கட்டப்பட்டு நிறைவடையாதுள்ளது. 165 ஒட்டு மாங்கன்றுகளும் 27 பலாக் கன்றுகளும் 360 தென்னம் பிள்ளைகளும், தோடை, எலுமிச்சை, நாரத்தை, மாதுளங் கன்று ஆகியனவும் நாட்டிப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாங்கன்றுகள், பலாக் கன்றுகள் திருகோணமலை அன்பர். திரு. சிவசுப்பிர-மணியம் கேசவன் அவர்களாலும் மலர்க்கன்றுகளில் பல மஸ்கன்ஸ் கம்பனி உரிமையாளர் திரு. சு. சத்தியமூர்த்தி அவர்களாலும்வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிதி நிகழ்ச்சி

ஆலயத்திருப்பணி நிதிக்காக சென்னை பரத கலாஞ்சலி நிலையத்தின் மேலாளர் தனஞ்சயன் தம்பதிகுழுவினரின் சிவகீர்த்தி மாலை (நாளைப்போவர்) நந்தனார் நாட்டிய நாடக நிகழ்ச்சியின் சிறப்பினையும் அதனால் ரூபா 30 இலட்சம் திருப்பணிக்கு வசூலானதையும் நினைவுகூர்ந்து தனஞ்சயன் தம்பதியினர்க்கும் குழுவினர்க்கும் சபை நன்றி தெரிவித்து மகிழ்வடைகின்றது.

### நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள்

1. பாலாவி அணைக்கட்டும் வாய்க்காலும் திருத்துதல்.
2. பாலாவி திருக்குளத்தில் நீராழி மண்டபம் அமைத்தல்.
3. பாலாவி மேற்பரப்பில் மகாலிங்கப் பெருமானுக்கு தீர்த்தம் பெறுவதற்குத் தூய கேணி ஒன்று அமைத்தல்.
4. பலாவி மேற்குப்பகுதியில் அந்தியேட்டி மண்டபமும், கிணறும் கேணியும் அமைத்தல்.
5. சிவானந்த குருகுலம் அமைந்திருந்த இடத்தில் வேத, சிவாகமக், குருகுலக்கல்லூரி, பன்னிரு திருமுறைப் பண்ணிசை, சிவாசாரிய சைவக் குருமாரை உருவாக்குவதற்குமுரிய கல்லூரி ஆகியவற்றை அமைத்தல்.
6. ஐந்து திருத்தேர்களுக்கும் வேண்டிய தேர்க் கொட்டகைகளும் சீமெந்து மேடைகளும், இரண்டு சகடைகளும் ஒரு கட்டுச் சப்பரமும் அமைத்தல்.
7. புதிய யாக சாலையை வசந்த மண்டப வீதியில் அமைப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளல்
8. பழைய திருஞான சம்பந்தர், சுந்தரர் மடத்தை திருமண மண்டபமாகவும் சமையலறையாகவும் உணவு அறையாகவும் புதிய முறையில் அழகுற அமைத்தல்,
9. கோயில் கமகத்திற்கு முன்பாகவுள்ள மாளிகைத்திடல் சந்தியில் தோரண நுழைவாயில் ஒன்று அமைத்தல்.
10. ஆலயத்திற்குச் சொந்தமாகவுள்ள 119 ஏக்கர் காணியைத் திருத்தி அமைத்து விளைநிலமாக்கிக் குத்தகைக்கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. திருக்கோவிலின் திருவுருவங்களிருக்கும் இடங்களும் மடைப்பள்ளி முதல் சுற்று மேல்தள மண்டபங்கள் அனைத்தும் மழை ஒழுகினால் பாதிப்படைகின்றன. இவற்றைச் சீர் செய்தல் வேண்டும். 63 நாயன்மார் திருப்படிமங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

12. குருக்கள் மற்றும் பணியாளர்களின் மனையில் பல குறைபாடுகள் உள. அவற்றைத் திருத்துதல் வேண்டும்.

13. ஆலயத்திற்கெனப் புதிதாக ஒரு சிற்றுண்டிச் சாலையும் தனியாருக்கு ஏலத்தில் கொடுப்பதற்கு நான்கு கடைகளும், சிகைஅலங்கார நிலையம், சலவைத் தொழிலகம் ஆகியன அமைக்கப்படுதல் வேண்டும்.

14. வன துர்க்கை ஆலயம் அமைக்க ஆவன வேண்டும்.

15. மத்திய மருந்தகம் ஒன்று அமைத்தல் வேண்டும்.

16. இராவண அனுக்கிரக மூர்த்தி, சண்டிகேசுவர அனுக்கிரகமூர்த்தி, கங்காளமூர்த்தி, திரிபுராந்தகர் , கஜசம்காரமூர்த்தி, சட்டநாதர், காலசம்கார மூர்த்தி, சரபமூர்த்தி, வீரபத்திரர், ஊர்த்துவ தாண்டவமூர்த்தி, மகாசதாசிவ மூர்த்தி, இடபர்ரூடர்,கல்யாண சுந்தரர், உமாமகேஸ்வரர், அர்த்தநாரீசுவரர், பிட்சாடனர், சுவாமிநாதர். முகலிங்கம், சகஸ்திரலிங்கம், ஏரம்ப மூர்த்தி, சரபமூர்த்தி, ஆகியோருக்குத் திருவுருவத் திருமேனிகள் அமைக்கப்படுதல் வேண்டும்.

நன்றி

இ. நமசிவாயம் — தலைவர்

ச.சரவணமுத்து — செயலாளர்

(செயற்குழு உறுப்பினர் சார்பாக.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

### 31 மார்ச் 2003 இல் உள்ளவாறான ஐந்தொகை

| 31-03-02 | | | Rs cts | Rs cts |
|---|---|---|---|---|
| *18,789.941* | நிலையான சொத்துக்கள் | | | *34,114,643.37* |
| *23,801.940* | முதலீடுகள் | B1 | | *18,151,846.44* |
| *42,589.881* | | | | *52,266,489.81* |
| *373,113* | நடப்புச் சொத்துக்கள் | B2 | *479,155.95* | |
| *0* | நடப்புப் பொறுப்புகள் | B3 | *12,720.85* | |
| *373,113* | தேறிய நடப்புச் சொத்துக்கள் | | | *466,435.10* |
| *42,962.994* | மொத்த தேறிய சொத்துக்கள் | | | *52,732,924.91* |

**கீழ்வருவனவற்றால் நிதியீட்டப்பட்டுள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| *42,962.994* | திரண்ட நிதி | B4 | *52,732,924.91* |
| *42,962,994* | | | *52,732,924.91* |

Sgd.ச. திருவாதவூரன்

Sgd.S.U சந்திரகுமாரன்

Sgd. வி. கயிலாசபிள்ளை — Sgd. திருமதி அ. கயிலாசபிள்ளை

அறங்காவலர் சபைத்தலைவர் — பொருளாளர்கள்

மேற்படி ஐந்தொகையை நாம் கணக்கு ஏடுகளுடன் பரிசீலித்து பார்த்ததன் படியும் கணக்கு ஏடுகளின் தேவையான தகவல்கள் விளக்கங்களின்படி இத்தொகை சபையின் நிலைமையை சரியாகக் காட்டுகின்றதென்பதை உறுதிப்படுத்துகிறோம்.

K.K.ஞானேந்திரன் அசோசியேட்ஸ்

பட்டய கணக்காளர்

(கௌரவ கணக்காய்வாளர்கள்)

கொழும்பு

23.11.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

**31மார்ச் 2003 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு**

| 31-03-02 | | Rs cts | Rs cts |
|---|---|---|---|
| | **வரவுகள்** | | |
| 51,529 | உறுப்பினர் சந்தா | | 41,602.00 |
| 14,729 | உண்டியல் | | 452,794.63 |
| 314,532 | நன்கொடைகள் | | 9,660,154.70 |
| 1,840,778 | பங்கு இலாபம் கிடைத்தது- மொத்தம் P1 | | 1,324,050.00 |
| 2,882,113 | வட்டி கிடைத்தது- மொத்தம் P2 | | 1,928,287.74 |
| 467,788 | மொத்த ஆலய வரவுகள் | | 624,238.64 |
| 5,000,000 | RAAN மூலம் கிடைத்த உதவி | | 0.00 |
| 10,571,468 | | | 14,031,127.71 |
| | **மொத்த செலவுகள்** | | |
| 39,320 | சம்பளங்கள், கூலிகள் | 659,790.00 | |
| 630 | வங்கிக்கட்டணம் | 24,364.55 | |
| 21,661 | மின் | 62,592.78 | |
| 0 | அச்சுக்கூலி, கடதாசி | 67,469.50 | |
| 18,401 | அஞ்சல் தொலைபேசி | 99,155.39 | |
| 118,052 | போக்குவரத்து , வாகனம்பராமரிப்பு | 294,672.27 | |
| 1,370,301 | ஆலயதிருத்த வேலைகள் பராமரிப்பு | 810.346.45 | |
| 27,653 | நன்கொடைகள்& நானாவித செலவுகள் | 546,441.05 | |
| 18,905 | பூசைச்செலவுகள் | 121,173.00 | |
| 373,135 | சிவராத்திரி செலவுகள் | 0.00 | |
| 703,892 | நீக்கப்பட்ட முதலீடுகள் - அழிந்தவை | 0.00 | |
| 500,000 | சுற்றாடல் துப்பரவாக்கள் | 1,575,192.50 | |
| 3,191,949 | | | 4,261,197.49 |
| 7,379,518 | செலவு நீங்கிய வரவு (வரிக்குமுன்) | | 9,769,930.22 |
| 441,747 | வரி | | 0.00 |
| 6,937,771 | வரி நீங்கிய நிதி- திரண்டநிதிக்கு | | 9,769,930.22 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

### ஐந்தொகைக்கு குறிப்புகள்

| | 31-03-03 | 31-03-02 |
|---|---|---|
| **B1** முதலீடு — கிரையம் | | |
| அஸ்பெஸ்டஸ் சீமெ இண்டஸ்ரீஸ் லிமிடெட் | 69,850.00 | 69,850 |
| மெட்கான் சிலோன் லிமிடெட் | 7,500.00 | 7,500 |
| லங்கம் சிலோன் லிமிடெட் | 3,270.00 | 3,270 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் | 88,956.83 | 88,957 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | 4,867,945.84 | 4,867,946 |
| | 5,037,522.57 | 5,037,523 |
| அரசாங்க விலைகூறும் சீட்டு - திறைசேரி | 10,282,192.06 | 12,564,475 |
| விலைகூறும் சீட்டு - நேஷன் ட்ரஸ்ட் வங்கி | 0.00 | 4,038,477 |
| குறுகிய கால வைப்பு - நேஷன் டரஸ்ட் வங்கி | 2,772,131.81 | 2,161,466 |
| நிலையான வைப்பு | 60,000.00 | 0 |
| | 18,151,846.44 | 23,801,940 |

| | | | |
|---|---|---|---|
| **B2** நடப்புச் சொத்துக்கள் | | | |
| வரி மீளப் பெறக்கூடியது | | 135,001 | 158,278 |
| வங்கி மீதி | B2 | 295,091.69 | 214,835 |
| ஊழியர் கடன் | B2.2 | 31,000.00 | 0 |
| கையிருப்பு | | 18,063.26 | 0 |
| | | 497,155.95 | 373.113 |

| | | |
|---|---|---|
| **B3** நடப்பப் பொறுப்புக்கள் | | |
| நேஷன் டரஸ்ட் வங்கி | 12,720.85 | 0 |
| | 12,720.85 | 0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B4 திரண்ட நிதி

| | | |
|---|---|---|
| மீதி 01-04-04 | 42,962,994.35 | 36,029,965 |
| இவ்வாண்டின் செலவு நீங்கிய வரவு | 9,769,930.22 | 6,937,772 |
| சென்ற ஆண்டு வரி குறைபாடு | 0.00 | (4,742) |
| | 52,732,924.57 | 42,962,994 |

## B2.1 வங்கி

| | |
|---|---|
| இலங்கை வங்கி - மெட்ரோ கிளை | 2992.27 |
| ஹற்றன் நஷனல் வங்கி - மன்னார் | 165,004.71 |
| மக்கள் வங்கி - மன்னார் | 127,094.71 |
| | 295,091.69 |

## B2.2 ஊழியர் கடன்

| | |
|---|---|
| செல்வமோகன் சர்மா | 22,000.00 |
| இராமகிருஸ்ணன் | 9,000.00 |
| | 31,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

### வரவு செலவுக் கணக்குக்கான குறிப்புகள் 2002-2003

| | பங்குகள் எண்ணிக்கை | இலாபம் |
|---|---|---|
| **P.1 கிடைத்த பங்கு இலாபம்** | | |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | 675,000 | 583,698 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் | 13,000 | 22,100 |
| அஸ்பெஸ்டஸ் சீமென்ட் இன்ட்ஸ்ரீஸ் லிமிடெட் | 29,160 | 39,367 |
| அஸ்பெஸ்டஸ் சீமென்ட் இன்டஸ்ரீஸ் லிமிடெட் | 29,160 | 52,665 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் | 13,000 | 18,720 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | 675,000 | 607,500 |
| | | 1,324,050 |

| | |
|---|---|
| **P.2 கிடைத்த வட்டி** | |
| அரசாங்க திறைசேரி சீட்டு | 1,717,717.41 |
| விலைகூறும் சீட்டு | 184,811.83 |
| குறுகிய கால வைப்பு | 25,758.50 |
| | 1,928,287.74 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

### 31 மார்ச் 2004 இல் உள்ளவாறான ஐந்தொகை

| 31-03-03 | | | Rs ct |
|---|---|---|---|
| *34,114,643.00* | நிலையான சொத்துக்கள் | | *49,339,411.91* |
| *18,151,846.00* | முதலீடுகள் | B1 | *18,008,320.00* |
| *479,156.00* | நடப்புச் சொத்துக்கள் | B2 | *762,726.41* |
| *0* | நடப்புப் பொறுப்புகள் | | *0* |
| *52,745,645* | மொத்த தேறிய சொத்துக்கள் | | *68,110,458.32* |

**கீழ்வருவனவற்றால் நிதியீட்டப்பட்டுள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| *52,732,925* | திரண்ட நிதி | B3 | *68,110,458.32* |
| *12,720* | நடப்புப் பொறுப்பு | | *00.0* |
| *52,745,645* | | | *68,110,458.32* |

Sgd.ச. திருவாதவூரன்

Sgd.S.U சந்திரகுமாரன்

Sgd. வி. கயிலாசபிள்ளை
அறங்காவலர் சபைத்தலைவர்

Sgd. திருமதி அ. கயிலாசபிள்ளை
பொருளாளர்கள்

மேற்படி ஐந்தொகையை நாம் சபையின் கணக்கு ஏடுகளுடன் பரிசீலித்து பார்த்ததன் படியும் கணக்கு ஏடுகளின் படியும் தேவையான தகவல்கள் விளக்கங்களின்படி இத்தொகை சபையின் நிலைமையை சரியாகக் காட்டுகின்றதென்பதை உறுதிப்படுத்துகிறோம்.

K.K.ஞானேந்திரன் அசோசியேட்ஸ்
பட்டய கணக்காளர்
(கௌரவ கணக்காய்வாளர்கள்)

கொழும்பு
31-12-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

**31மார்ச் 2004 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு**

| 31-03-03 | | | Rs cts | Rs cts |
|---|---|---|---|---|
| | **வரவுகள்** | | | |
| 41,602 | உறுப்பினர் சந்தா | | | 47,045.00 |
| 452,795 | உண்டியல் | | | 617,976.23 |
| 96,601,55 | நன்கொடைகள் | P3 | | 8,141,485.18 |
| 1,324,050 | பங்கு இலாபம் கிடைத்தது- மொத்தம் | P1 | | 1,918,759.95 |
| 1,928,288 | வட்டி கிடைத்தது- மொத்தம் | P2 | | 378,433.00 |
| 624,239 | மொத்த ஆலய வரவுகள் | P4 | | 1,969,619.17 |
| - | பங்கு விற்பனை | P5 | | 12,957,802.64 |
| 14,031,128 | | | | 26,031,121.25 |
| | **மொத்த செலவுகள்** | | | |
| 659,790 | சம்பளங்கள், கூலிகள் | | 1,573,549.00 | |
| 24,365 | வங்கிக்கட்டணம் | | 48,024.65 | |
| 62,593 | மின் | | 248,011.36 | |
| 67,470 | அச்சுக்கூலி, கடதாசி | | 84,660.00 | |
| 99,155 | அஞ்சல் தொலைபேசி | | 113,718.50 | |
| 294,672 | போக்குவரத்து , வாகனம்பராமரிப்பு | | 533,457.94 | |
| 810,346 | ஆலயதிருத்த வேலைகள் பராமரிப்பு | | 1,400,688.00 | |
| 546,441 | நன்கொடைகள்& நானாவித செலவுகள் | | 277,031.70 | |
| 121,173 | பூசைச்செலவுகள் | | 130,519.50 | |
| 0 | விமானகட்டணம் & அந்நியசெலவுகள் | | 847,596.25 | |
| 0 | தண்ணீர் | | 308,713.00 | |
| 1,575,193 | சுற்றாடல் துப்பரவாக்கள் | | 255,767.00 | |
| - | கும்பாபிஷேகம் | | 2,778,540.00 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | - அறநெறி | 8,000.00 | |
| | - தேய்மானம் | 1,948,143.54 | |
| 4,261,197 | | | 10,526,420.84 |
| 9,769,930 | செலவு நீங்கிய வரவு (வரிக்குமுன்) | | 15,504,700.41 |
| 0 | வரி | | 127,167.00 |
| 9,769,930 | வரிநீங்கிய நிதி - திரண்ட நிதிக்கு | | 15,377,533.41 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தொகைக்கு குறிப்புகள்

## B1 முதலீடு — கிரையம்

| | 31-03-04 | 31-03-03 |
|---|---|---|
| அஸ்பெஸ்டஸ் சீமெ இன்டஸ்ரீஸ் லிமிடெட் | 69,850.00 | 69,850 |
| மெட்கான் சிலோன் லிமிடெட் | 7,500.00 | 7,500 |
| லங்கம் சிலோன் லிமிடெட் | 3,270.00 | 3,270 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் | 0.00 | 88,957 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | 12,077,700.00 | 4,867,946 |
| | 12,158,320.00 | 5,037,523 |
| அரசாங்க விலைகூறும் சீட்டு - திறைசேரி | 4,100,000.00 | 10,282,192 |
| விலைகூறும் சீட்டு - நேஷன் ட்ரஸ்ட் வங்கி | 900,000.00 | 0 |
| குறுகிய கால வைப்பு - நேஷன் டரஸ்ட் வங்கி | 850,000.00 | 2,772,132 |
| நிலையான வைப்பு | 00.00 | 60,000 |
| | 18,008,320.00 | 18,151,846 |

## B2 நடப்புச் சொத்துக்கள்

| | | 31-03-04 | 31-03-03 |
|---|---|---|---|
| வரி மீளப் பெறக்கூடியது | | 218,113.70 | 135,001 |
| வங்கி மீதி | B2 | 165,459.02 | 295,092 |
| கையிருப்பு | | 21,953.69 | 18,063 |
| ஊழியர் கடன் | B2.2 | 82,000.00 | 31,000 |
| மகாசிவராத்திரி மடம் - கடன் | | 225,000.00 | 0 |
| முன்கொடுப்பனவு | | 50,200.00 | 0 |
| | | 762,726.41 | 479,156 |

## B2.1 வங்கி

| | |
|---|---|
| இலங்கை வங்கி - மெட்ரோ கிளை | 2992.27 |
| நேஷன் டரஸ்ட் வங்கி | 25,086.45 |
| ஹற்றன் நஷனல் வங்கி - மன்னார் | 117,974.87 |
| மக்கள் வங்கி - மன்னார் | 19,405.43 |
| | 165,459.02 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B2.2 ஊழியர் கடன்

| | |
|---|---|
| S. விஜயராஜா | 44,000 |
| K.இராமகிருஸ்ணன் | 38,000 |
| | 82,000 |

## B4 திரண்ட நிதி

| | | |
|---|---|---|
| மீதி 01-04-04 | 52,732,924.91 | 42,962,994 |
| இவ்வாண்டின் செலவு நீங்கிய வரவு | 15,377,533.41 | 9,769,930 |
| | 68,110,458.32 | 52,732,925 |

### வரவுசெலவுக் கணக்குக்கான குறிப்புகள் 2003 — 2004

P1 கிடைத்த பங்கு இலாபம்

| | பங்குகளின் எண்ணிக்கை | மொத்தப் பங்கு இலாபம் |
|---|---|---|
| அஸ்பெஸ்டஸ் சீமெ இன்டஸ்ரீஸ் லிமிடெட் | 675,000 | 900,496.00 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் | 13,000 | 28,721.00 |
| அஸ்பெஸ்டஸ் சீமெ இன்டஸ்ரீஸ் லிமிடெட் | 29,160 | 91,937.00 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | 864,000 | 897,606.00 |
| | | 1,918,760.00 |

P2 கிடைத்த வட்டி

| | |
|---|---|
| அரசாங்க திறைசேரி சீட்டு | 218,682.88 |
| விலைகூறும் சீட்டு | 8,686.31 |
| குறுகிய கால வைப்பு | 151,063.89 |
| | 378,433.08 |

## P3 நன்கொடைகள்

| | |
|---|---|
| நன்கொடைகள் | 5,468,485.18 |
| கும்பாபிஷேகம் | 1,800,000.00 |
| கும்பாபிஷேகம் (சால்வை) | 186,000.00 |
| தேர் திருப்பணி | 587,000.00 |
| அரசாங்க அதிபர் மன்னார் | 100,000.00 |
| | 8,141,485.18 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## P4 திருக்கோவில் வரவுகள்

| | |
|---|---|
| சிவராத்திரி | 227,050.95 |
| அபிஷேகம் | 231,362.00 |
| அரிச்சனை | 433,290.00 |
| அந்தியஸ்டி | 12,350.00 |
| தீர்த்தக் காவடி | 33,540.00 |
| திருவிழா | 557,907.00 |
| திருமணம் | 103,324.00 |
| புத்தக விற்பனை | 149,522.00 |
| மற்ற வரவுகள் | 221,273.22 |
| | 1,969,619.17 |

## P5 பங்கு விற்பனை விபரம்

| | | |
|---|---|---|
| JKHL | 96,000 | 11,168,211.87 |
| CCSL | 13,000 | 1,789,590.77 |
| | | 12,957,802.64 |

### ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் பங்கு நிலவரம்

| | |
|---|---|
| 01-04-2003ல் இருந்தவை | 675,000 |
| இவ்வருடத்தில் கொள்முதல் செய்தவை | 285,000 |
| இவ்வருடத்தில் விற்றவை | (96,000) |
| 31-03-2004 ன் மிகுதி | 864,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

## 31 மார்ச் 2005 இல் உள்ளவாறான ஐந்தொகை

| 31-03-04 | | | Rs cts |
|---|---|---|---|
| 49,339,412 | நிலையான சொத்துக்கள் | | 54,873,625.79 |
| 18,008,320 | முதலீடுகள் | B1 | 16,401,120.00 |
| 762,726 | நடப்புச் சொத்துக்கள் | B2 | 712,479.12 |
| 68,110,458 | மொத்த தேறிய சொத்துக்கள் | | 71,987,224.91 |

**கீழ்வருவனவற்றால் நிதியீட்டப்பட்டுள்ளது.**

| | | | |
|---|---|---|---|
| 68,110,458 | திரண்ட நிதி | B3 | 71,486,173.81 |
| 0 | நடப்புப் பொறுப்புக்கள் | B4 | 501,051.10 |
| 68,110,458 | மொத்த நடப்புப் பொறுப்புக்கள் | | 71,987,224.91 |

Sgd.ச. திருவாதவூரன்
Sgd.S.U சந்திரகுமாரன்
Sgd. திருமதி அ. கயிலாசபிள்ளை
பொருளாளர்கள்

Sgd. வி. கயிலாசபிள்ளை
அறங்காவலர் சபைத்தலைவர்

மேற்படி ஐந்தொகையை நாம் சபையின் கணக்கு ஏடுகளுடன் பரிசீலித்து பார்த்ததன்படியும் கணக்கு ஏடுகளின் படியும் தேவையான தகவல்கள் விளக்கங்களின்படி இத்தொகை சபையின் நிலைமையை சரியாக காட்டுகின்றதென்பதை உறுதிப்படுத்துகிறோம்.

K.K.ஞானேந்திரன் அசோசியேட்ஸ்
பட்டய கணக்காளர்
(கௌரவ கணக்காய்வாளர்கள்)

கொழும்பு
23.11.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை

### 31மார்ச் 2005 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு

| 31-03-04 | | | Rs cts |
|---|---|---|---|
| | **வரவுகள்** | | |
| 47,045 | உறுப்பினர்கள் | | 17,017.00 |
| 617,976 | உண்டியல் | | 448,151.05 |
| 8,141,485 | நன்கொடைகள | P5 | 2,969,052.65 |
| 1,918,760 | பங்கு இலாபம் கிடைத்தது மொத்தம் | P1 | 3,153,425.27 |
| 378,433 | வட்டி கிடைத்தது மொத்தம் | P2 | 241,444.52 |
| 1,969,619 | மொத்த ஆலய வரவுகள் | P3 | 2,535,016.25 |
| 12,957,803 | பங்கு விற்பனை | P 4 | 3,821,928.75 |
| 26,031,121 | | | 13,186,035.49 |

| | | |
|---|---|---|
| | **மொத்த செலவுகள்** | |
| 1,573,549 | சம்பளங்கள் கூலிகள் | 2,696,598.00 |
| 48,025 | வங்கிக்கட்டணம் | 28,513.26 |
| 248,011 | மின் | 337,475.82 |
| 84,660 | அச்சுக்கூலி, கடதாசி | 103,474.50 |
| 113,719 | அஞ்சல் தொலைபேசி | 134,667.10 |
| 533,458 | போக்குவரத்துவாகனம் பராமரிப்பு | 555,749.05 |
| 1,400,688 | ஆலயதிருத்த வேலைகள் பராமரிப்பு | 1263,561.50 |
| 277,032 | நன்கொடைகள்&நானாவிதச் செலவுகள் | 108,259.45 |
| 130,520 | பூசைச்செலவுகள் | 786,562.50 |
| 0 | நன்கொடைகள் | 175,000.00 |
| 308,713 | தண்ணீர் | 544,270.00 |
| 847,596 | விமானக்கட்டணம் அந்நியசெலவுகள | 469,659.00 |
| 1,948,144 | தேய்மானம | 2,839,996.87 |
| 225,767 | சுற்றாடல் துப்பரவாக்கல் | 12,525.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 8,000 | அறநெறி பாடசாலை | 22,000.00 |
| 2,778,540 | கும்பாபிஷேகம் | 0 |
| 10,526,421 | | 10,078,312.05 |
| 15,504,700 | செலவு நீங்கிய வரவு (வரிக்குமுன்) | 3,107,723.44 |
| 127,167 | வரி | 88,588.95 |
| 15,377,533 | வரி நீங்கிய நிதி - திரண்ட நிதிக்கு | 3,019,134.49 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர அலயத் திருப்பணிச்சபை

## ஐந்தொகைக்கு குறிப்புகள்

| | | | 31-03-05 | 31-03-04 |
|---|---|---|---|---|
| B1 | **முதலீடு கிரயம்** | | | |
| | அஸ்பெஸ்டஸ் சீமெ இன்டஸ்ரீஸ் லிமிடெட் | | 69,850.00 | 69,850 |
| | மெட்கான் சிலோன் லிமிடெட் | | 7,500.00 | 7,500 |
| | லங்கம் சிலோன் லிமிடெட் | | 3,270.00 | 3,270 |
| | ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | | 11,620,500.00 | 12,077,700 |
| | | | 11,701,120.00 | 12,158,320 |
| | அரசாங்க விலைகூறும் சீட்டு - திறைசேரி | | - | 4,100,000 |
| | விலைகூறும் சீட்டு - நேஷன் ட்ரஸ்ட் வங்கி | | 900,000.00 | 900,000 |
| | குறுகிய கால வைப்பு - நேஷன் டரஸ்ட் வங்கி | | 3,800,000.00 | 850,000 |
| | | | 16,401,120.00 | 18,008,320 |
| B2 | **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| | மகா சிவராத்திரி மடம் C/A | | 150,000.00 | 225,000 |
| | முன்கொடுப்பனவு | | - | 50,200 |
| | வரி மீளப் பெறக்கூடியது | | 139,498.42 | 218,114 |
| | ஊழியர் கடன் | B2.2 | 110,000.00 | 82,000 |
| | வங்கி மீதி | B2.1 | 22,397.70 | 165,458 |
| | கையிருப்பு | | 290,583.00 | 21,954 |
| | | | 712,479.12 | 762,726 |
| B3 | **திரண்ட நிதி** | | | |
| | மீதி 01-04-04 | | 68,110,458.32 | 52,732.925 |
| | இவ்வாண்டின் செலவு நீங்கிய வரவு | | 3,019,134.49 | 15,377,533 |
| | சென்ற ஆண்டு வரி குறைபாடு | | 356,581.00 | 0 |
| | | | 71,486,173.81 | 68,110,458 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B2.1 வங்கி**

| | |
|---|---|
| இலங்கை வங்கி - மெட்ரோ கிளை | 29992.27 |
| மக்கள் வங்கி - மன்னார் | 19405.43 |
| | 22,397.70 |

**B2.2 ஊழியர் கடன்**

| | |
|---|---|
| S. விஜயராஜா | 11,000.00 |
| K.இராமகிருஸ்ணன் | 29,000,00 |
| உத்தமேஸ்வர குருக்கள் | 50,000.00 |
| S. சிவகுமார் | 20,000,00 |
| | 110,000.00 |

**நடப்புப்பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| நேஷனல் டரஸ்ட் வங்கி | 17139.07 |
| ஹற்றன் நஷனல் வங்கி மன்னார் | 483,912.03 |
| | 501,051.10 |

**P1 வரவு செலவுக் கணக்குக்கான குறிப்புகள்**

கிடைத்த பங்கு இலாபம்

| | |
|---|---|
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் | 3,058,499 |
| லங்கம் சிலோன் லிமிடெட் | 2,633 |
| சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் | 92,294 |
| | 3,153,426 |

பின்குறிப்பு

**ஜோன்கீல்ஸ் ஹோலடிங்ஸ் லிமிடெட் — பங்கு நிலவரம்**

| | |
|---|---|
| 01-04-2004இருந்தவை | 864,000 |
| இலாபத்திலிருந்து அளிக்கப்படும் பங்குகள் (Bonus) | 87,000 |
| | 951,000 |
| இவ்வருடத்தில் விற்றவை | (36,000) |
| 31-03-2005ன் மிகுதி | 915,000 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## P2 கிடைத்த வட்டி

| | |
|---|---|
| அரசாங்க திறைசேரி சீட்டு | 123,901.36 |
| நிலையான வைப்பு | 14,506.11 |
| குறுகிய கால வைப்பு | 103,037.05 |
| | 241,444.52 |

## P3 ஆலய வரவுகள்

| | |
|---|---|
| அபிசேகம் | 152,642.25 |
| அர்ச்சனை | 1,204,596.50 |
| அந்தியஸ்டி | 17,450.00 |
| தீர்த்தக்காவடி | 186,760.00 |
| திருவிழா | 512,028.50 |
| திருமணம் | 132,530.00 |
| மலர் விற்பனை | 143,945.00 |
| வெள்ளி நாணயங்கள் | 80,000.00 |
| சால்வை | 28,200.00 |
| திருவமுது | 48,750.00 |
| வேறு வகையால் | 28,114.00 |
| | 2,535,016.25 |

## P4 பங்கு விற்பனை

| | |
|---|---|
| பங்குகள் | விற்றவிலை |
| 36,000 JKHL | 3,821,928.75 |

## P5 நன்கொடை

| | |
|---|---|
| நன்கொடை - பொது | 2,555,051.65 |
| தேர் திருப்பணி | 414,001.00 |
| | 2,969,052.65 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் அவர்கள்
யாழ்/இந்துக்கல்லூரி
யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org